DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு மே மாதம் வியாழன்கிழமை 8ம் நாள் சாட்சியாகிய ஸ்ரீராம் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஸ்ரீராம் | வயது | 37 |
| த/பெ. | மனோகரர் | இனம் | ஆண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | தனியார் நிறுவனத்தில் வேலை |
| சமயம் | | தாலூக்கா | |

**M.C.09/2023**

(மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர். மனுதாரர் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி 08.05.2025 எ.சா.1</u>**

1. எனது முதன்மை சாட்சியத்தில் மனுதாரர் தோல் நோய் சம்மந்தப்பட்ட பிரச்சனைக்கு சிகிச்சை எடுத்து வருவதாக தெரிவித்தற்கு மருத்துவ ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது முதன்மை சாட்சியத்தில் மனுதாரருக்கு தலைசுற்றல் ஏற்படும் என்பதால் சாலின் மருந்து எடுத்துக் கொண்டதாக CHRONIC பிரச்சனை காரணமாக எடுத்துக்கொள்வார் என்று தெரிவித்துள்ளேன். தலை சுற்றல் பிரச்சனை CHRONIC பிரச்சனையில் வராது என்றால் சரியல்ல.

2. மனுதாரருக்கு எனது முதன்மை சாட்சியத்தில் தெரிவித்தது போல் எந்த மருத்துவ பிரச்சனையும் இல்லை என்றால் சரியல்ல. மனுதாரருக்கு மருத்துவ பிரச்சனை உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சொரியாசிஸ் வியாதி கை, கால்களில் மட்டும்தான் வரும் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு உடல் முழுவதும் வரும்.

3. மனுதாரர் பொய்யாக சாதி சான்றிதழ் பெற்றதற்கு ஆவணம் போட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் மனுதாரருக்கு இல்லாத நோய் உள்ளதாகவும், பொய்யான சாதி சான்றிதழ் வாங்கியதாக தினமும் கொடுமை செய்து வந்ததாலும், நான் மனுதாரருடன் தாம்பத்தியத்தில் ஈடுபடுவில்லை என்றால் சரியல்ல.

4. மனுதாரர் முதல் திருமணம் விவாகரத்து ஆனதற்கு ரூபாய் 26 லட்சம் பணம் பெற்றதற்கு ஆதரவாக என்தரப்பில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரர் தரப்பில் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் முதல் திருமண செலவிற்காகதான் ரூபாய் 26 லட்சம் வாங்கப்பட்டது என்றாலும், ஜீவனாம்சமாக பணம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல.

5. மனுதாரர், அவரது பெற்றோருக்கு சொந்தமான திருத்தணியில் உள்ள பைனான்ஸ் நிறுவனத்தை நடத்தி வருவதற்கு என் தரப்பில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன். மனுதாரர் மாதம் ரூபாய் 2,50000/– வருமானம் ஈட்டி வருவதற்கு என் தரப்பில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனுதாரருக்கு ரூபாய் 2 கோடிக்கு சொத்துக்கள் உள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. மனுதாரர் 2021 பிப்பிரவரி மாதம் கர்ப்பமாக இருப்பதாக தெரிவித்தாக எனது முதன்மை சாட்சியத்தில் தெரிவித்து உள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனுதாரர்தான் சொன்னார். நான் மனுதாரரை மருத்துவ பரிசோதனை செய்தேனா என்றால் அழைத்தேன் மனுதாரர் வரவில்லை.

7. என்னிடம் காட்டப்படும் கணினி நிலஉரிமை ஆவணத்தில் அரக்கோணம் வார்டு A வில் 1/22 க்கு என் பெயரில் பதிவு உள்ளது என்றால் அது பொய். என் பெயரில் எந்த சொத்தும் கிடையாது. நான் மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுக்க கூடாது என்பதற்காக பொய்யான குற்றச்சாட்டுக்களை தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. மனுதாரருக்கு எந்தவிதமான வருமானமும் இல்லை என்றாலும், மனுதாரருக்கு சொத்து எதுவும் இல்லை என்றாலும் நான் மனுதாரரை பராமரிக்க கடமை பட்டவர் என்றால் இல்லை.

8. மனுதாரர் என்னிடம் தெரிவிக்காமல் அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றதாக எனது முதன்மை சாட்சியத்தில் பொய்யாக தெரிவித்துள்ளேன் என்றால் இல்லை. மனுவில் கோரியுள்ள படி மனுதாரருக்கு நான் ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் என்றால் இல்லை. நான் ரூபாய் 2 லட்சத்திற்கு மேல் சம்பளம் பெறுவதால் எனது சம்பள பட்டியலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(எதிர்மனுதாரர் அவரது சம்பள பட்டியல், வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்ய தயாராக உள்ளதாக தெரிவித்ததால் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.